உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

## அல்லது

# குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 7 | 1925௵ ஜூன்௴ | பகுதி 6


## தெய்வ வணக்கம்.

நெடியசக் கரவரையும் இடியவெற் புகள்பலவும்
நெரியநித் திலவரிசைநீர்
நிறைதிரைக் கடல்சிதற முறைவிடுத் திரவிமதி
நினைவுமற் றுளமருளவே
படிபொறுத் திடுமரவு விடமுயிர்த் துளரியுடல்
பதைபதைத் துழலமாநீள்
பறவையொத் திடவலய முறுதிசைக் கடகரிகள்
பாதவித் தலறிவிழமேல்
உடுவுமிற் றுதிரமகிழ் அடியர்விக் கினமொழிய
உயர்முகிற் படலமதெலாம்
உடைபடக் கனபாத நடனமிட் டிகலிவிரை
வொடுசமர்க் களயதனிலே
சிடுசிடுத் திடுமவுணர் படைதிகைக் கிட உபய
சிறையடித் தினியபுகழ்சேர்
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமரகுருவே.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.

# ஹிதோபதேசம்

(1) உன் நாட்டிலே பிறந்த கடையோனையும் உன்னுடைய சகோதரனாக எண்.

(2) உன் நாட்டினரை அவமதித்துப் பேசுகிறவர்களுடைய நாட்டில் நீ காலெடுத்து வைக்காதே. அந்தப் பாவிகளை நீ கண்ணெடுத்தும் பாராதே.

அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய நாடுகளுக்குப் பிரசங்கம் செய்யப்போயிருந்த கவிச்சக்கரவர்த்தியாகிய ரவீந்திரநாத் டாகூரை அந்நாடுகளுக்கு வடக்கேயுள்ளதும் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளில் சிறந்ததுமாகிய கனடாவில் வந்து பிரசங்கிக்கும்படி சிலர், கேட்டுக்கொண்டனர். ரவீந்திரநாத் டாகூர், "இந்தியர்களை அவமதித்த அந்த மாகாணத்தில் நான் அடிவைக்கமாட்டேன்" என்று கூறினராம்.

(3) தைரியமும் மனவுறுதியும் விடாமுயற்சியும் தேசாபிமானமும்-உன் உள்ளே வளரும் வழியில் நீ நட. இந்தக் குணங்களுள்ளவர்களாலேதான் தேசம் ஓங்கும்.

(4) எப்படியாவது பிறருக்கு உதவி செய். சுகம், சரீரம், சௌகரியம் இவற்றை இழக்க நேரிட்டாலும் பரோபகாரத்தைக் கைவிடாதே.

(5) எல்லோரிடமும், நட்புக்கொண்டிருத்தல் வேண்டும்.

(6) எல்லோரிடமும் மரியாதையாய்ப் பேசு; ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள், நோயாளிகள்—இவர்களிடம் கருணையோடு வெகு மெதுவாய் மரியாதை தவறாமல் பேசு. எப்போதும் நீ செய்யும் உதவிக்குக் கைம்மாறு பெற நினையாதே!

(7) ஒரு ஜீவஜந்துவையும் நீ இம்சியாதே.

(8) பெரியோருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நட. அவர்களுடையகட்டளை சரியில்லையென்று தோன்றினாலும் உன் மனத்துக்குப் பிடிக்காவிட்டாலும், நீ முதலில் அதனை மறுக்காதே. செய்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் உன் ஆக்ஷேபணைகளைத் தெரிவித்துக்கொள்.

(9) உனக்கு என்ன சங்கடங்கள் வந்தாலும் நீ உன் முகத்தில் அதைக் காட்டாதே! எப்போதும் பிறர் உன்னிடம் விருப்பங்கொண்டு நட்புக்கொள்ளுமாறு உற்சாகமாக விரு. பெரியோருடைய கட்டளையை உற்சாகமாக நிறைவேற்று. கட்டளையைக் கேட்டதும் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு முறுமுறுத்துக்கொண்டு செய்யாதே.

(10) கூடியவரையில் செட்டாயிரு.

(11) மனம், வாக்கு, காயம் - இவை மூன்றிலும் சுத்தமாயிரு.

(12) நாடோறும் காற்றோட்டமான இடங்களில் கொஞ்சநேரம் உலாவு.

(13) சமயத்துக்குத் தக்கபடி சௌகரியங்களை ஏற்படுத்திக்கொள்.

(14) படிப்பில் கவனமாயிருப்பதோடு சரீர சுகம் கெடும்படி எந்த வேலையும் செய்யாதே. ஆனால் சரீரம் திடங்கொள்ளும்படி தேகப்பயிற்சி செய். காரியத்தை முடிக்கத் தக்க சக்தி உன்னிடத்தே வளரும்படி நட.

(15) பிறர் குற்றத்தை மறந்துவிடு. நீ செய்த குற்றத்திற்காக வருந்து.

(16) உன்னால் கூடியவரையில் உன் நண்பனைத் திருத்த முயலு.

# அஹல்யாபாய்

அஹல்யாபாய் என்னும் பெயர்கொண்ட ஒரு மகா ராஷ்டிரராணி 17-வது நூற்றாண்டில் மாளவதேசத்தை ஆண்டுவந்தாள். அவள் பரோபகார சிந்தையுடைய வளாயும் ராஜதந்திரம் உணர்ந்தவளாயும் விளங்கியபடி யால் அவளைப்பற்றி உலகம் இன்னும் புகழ்ந்து பேசிக் கொள்கிறது.

அவளுடைய சரித்திரத்தை, நம்முடைய பால விநோதினி நேயர்களுந் தெரிந்துகொள்ள வேண்டு மென்று கருதி இம்மாதம் அதனை எழுதலானோம்—

அஹல்யாபாய் காந்தி என்னும் பெயர் கொண்ட ஒரு மகாராஷ்டிர அரசனுக்கு வாழ்க்கைப்பட்டு மாலி யென்னும் பெயர்கொண்ட ஒருபுதல்வனையும் முக்தாபாய் என்னும் பெயர் கொண்ட ஒரு புதல்வியையும் அடைந்த பின் வைதவ்யமடைந்தாள்.

தந்தைக்குப் பிறகு மாலி, அரசுரிமையேற்றுப் பரி பாலித்து வந்தான். மாலி மகா துஷ்டன். அஹல்யா பாய் தரும சிந்தையுடையவள். ஆகையினால் அவள் அநேக நல்ல காரியங்களைச் செய்துகொண்டும் பிரா மணர்களை அபிமானித்தும் வந்தாள்.

மாலி அவற்றிற்கெல்லாம் இடையூறு செய்து வந் தான். அதனால் ஜனங்கள் அவனை வெறுத்து வந்தார் கள். அன்னை அஹல்யாபாயும் அவனிடம் வெறுப் புக்கொண்டாள். அவன் ஒரு சமயம், தேள்களை உள்ளே வைத்துக் கட்டி வஸ்திரமும் பாதரக்ஷையும்

பிராமணர்களுக்கு அனுப்பி வைத்தான்; இன்னொரு சமயம் பாம்பைப் பூரவிட்டுத் தன் முத்திரை வைத்து ஒரு கிண்ணமும் அனுப்பிவைத்தான்.

இது இப்படியிருக்க, மாலி ஒருசமயம் ஒரு தட்டான் மேல் ஒரு குற்றத்தைச்சுமத்தி அவனைக் கொலை செய்வித்தான். பின் சில நாட்களுக்கெல்லாம் அவன் குற்றமற்றவனென்பது தெரிந்தது. அதுமுதல் மாலி அதைப்பற்றிச் சிந்தித்த வண்ண மிருந்தபடியால் அவனுக்குப் புத்திபேதமுண்டாய் அதே நிலையில் இறந்தான்.

தட்டான், கொலைசெய்யப்படும்போது "நான் குற்றமற்றவன். என்னைக் கொல்லும் இந்தப்பழி உன்னையே அடையும்" என்று மாலியை நோக்கி வற்புறுத்திக் கூறி உயிரைவிட்டான்.

அஹல்யாபாய் தன் மகன் மாலி புத்திபேதங்கொண்டதற்குத் தட்டானிட்ட சாபமே காரணமெனக்கருதி அதற்காகப் பலவித சாந்திகளையும் தெய்வப்பிரார்த்தனைகளையும் செய்துவந்தாள். முடிவில் அவன் ஒன்றிலும் வழிப்படாமலே இறந்தான். மைந்தன் இறந்த பின் அரசுரிமை ஏற்பதற்கு வேறு ஆண்சந்ததி இல்லாதபடியால் அஹல்யாபாய் அரசுரிமையைத் தானே யேற்றுக் கொண்டாள்.

ஸ்திரீயானாலும் அஹல்யாபாய் நல்ல புத்திசாலியாகையால் இராஜ்ய விவகாரத்தில் யுக்தியும் புத்தியும் தந்திரமும் தைரியமும் காட்டிக் குடிகள் புகழ அரசுபுரிந்துவந்தாள். அவள் பிறர் குறை கூறுதற்கில்லாதபடி அரசுபுரிந்து வந்தாளாயினும், அவளுடைய குருவாகிய ஜோஷ்பந்தோ என்பவனுக்கு அவள் அரசாட்சி

செய்வதில் விருப்பமில்லை. ஏனென்றால் அஹல்யாபாய் அவனுக்குப்பூர்ண அதிகாரங் கொடாமல் குரு என்கிற மரியாதைக் கிரமம் தவறாமல் மாத்திரம் நடத்திவந் தாள். இதில் அவனுக்கு இஷ்டமில்லை. அதனால் அவன் அகல்யாபாயைப் பார்த்து, "நீ ஒரு பிள்ளையை ஸ்வீ காரம் செய்துகொள். ஸ்வீகாரம் செய்துகொள்ளா விட்டால் வம்சம் அற்றுப்போய்விடும்" என்று சொல் லிப்பார்த்தான். அவள் அதற்கிணங்கவில்லை; "நான் ஓர் அரசனுக்கு வாழ்க்கைப்பட் டிருந்தேன்; அரச குடும் பத்திலே பிறந்தேன். ஓர் அரசனுக்கு அன்னையாயு மிருந்தேன். என்பிள்ளை இறந்ததோடு மொலாஹர் வம்சம் அழிந்தது. அப்படி ஒழிந்த வம்சத்தை அன் னியனொருவனால் விருத்தி செய்வதில் எனக்கு விருப்ப மில்லை. அதில் ஏதேனும் பயனிருக்குமென்று எனக் குப் புலப்படவில்லை" என்று வெகு தைரியமாய் மறு மொழி தந்தனுப்பிவிட்டாள்.

அஹல்யாபாய் இவ்வாறு சொல்லவே குரு, மகா ராஷ்டிர தேச அரசனாயிருந்த ராகோபா என்பவனை, அஹல்யாபாய்க்கு விரோதமாய்ச் சண்டைக்குக் கிளம் பும்படி தூண்டிவிட்டான். அவ்வரசன் ஆலோசனை இல் லாதவனாய் அஹல்யாபாயோடு சண்டை செய்ய ஆயத்த மானான். அதைக்கண்ட அஹல்யாபாய், தைரியமாய் மகாராஷ்டிர அரசனாகிய மாதவராவுக்கு, ராகோபா வின் அடாத செய்கையைப்பற்றிக் கடிதம் எழுதினாள். மாதவராவ், அஹல்யாபாயுடன் சண்டை செய்யாதிருக் கும்படி ராகோபாவுக்கு ஒருகடிதம் எழுதினான். அந்தக் கடிதத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியதா யிருந்தபடியால் அவன் சண்டையை நிறுத்திவிட்டான்.

இதன் பிறகு அஹல்யாபாய் பகைவரொருவருமில்லாமல் அரசு புரிந்துவந்தாள். தேக்காஜி ஹோல்கார் என்பவன் சேனாதிபதியாயிருந்தான். இவன் அஹல்யாபாய்க்கு நெருங்கிய உறவினன். நல்ல சாமர்த்தியசாலி. பின் அஹல்யாபாய் கங்காதரன் என்பவனை மந்திரியாக நியமித்து, அவனுக்கும் சேனாதிபதிக்கும் வேலைகளைச் சரிவரப் பகுந்துகொடுத்து அவர்களுக்குள் மனஸ்தாப மேற்படாதபடி செய்துவந்தாள். அந்தச் சாமர்த்தியத்தைப் புகழாதாரில்லை.

ஹோல்கார் சேனாதிபதியாயிருந்து அதிகாரம் செலுத்தியதில் அஹல்யாபாய்க்கு இரண்டு கோடி ரூபாய் வரும்படி வந்தது. அவள், ராஜ்ய விஷயமாய்ச் செலவாகுந்தொகைக்குச் சரியான கணக்கு வைத்திருந்தாள்; கணக்கெழுதாமல் செலவழிப்பதில்லை. சேனாதிபதியின் கருத்தைக் கேட்டறிந்தே எந்தக்காரியத்தையும் செய்வாள்; ஆலோசனையின்றித் தானே எதையும் செய்ய மாட்டாள்.

இப்படியிருந்தபடியால் அஹல்யாபாயின் கீர்த்தி வட இந்தியா முழுவதும் பரவியது. ஹிந்து தேசத்தில் அவளுடைய தர்பாருக்கு அநேக அரசர்கள் தூதனுப்பிவித்தனர். அஹல்யாபாயும் ஐதராபாக்கம், ஸ்ரீரங்கபட்டணம், நாகப்பூர், லக்ஷ்மணபுரி, கல்கத்தா இந்நகரங்களுக்குத் தூதனுப்பினாள்.

அஹல்யாபாய் பகிரங்கமாகவே கொலு வீற்றிருந்து தேச விசாரணைசெய்து வந்தாள். அக்காலத்தில் அதுபற்றி ஒருவரும் ஆக்ஷேபனை சொன்னதில்லை. தன் குடிகளில் ஏழைபணக்காரர் எல்லோரும் தத்தம்

உரிமைகளில் குறைவுறாமல் சுகமாக வாழும்படி அதி காரம் செலுத்திவந்தாள். யாரேனும் குறைகூறி முறை யிடுவரேல் அவர்கள் குறையை அநேகமாகத் தானே நேரில் விசாரித்து நீதி செலுத்துவாள்; சில சமயம் முதல் மந்திரியைவிட்டு விசாரிக்கச் செய்வாள். அவர் செய்யும் தீர்ப்பில் பக்ஷபாதமே யிராது.

இவ்வாறு இராஜ ஸம்பத்திலும் அதிகாரத்திலும் ஈடுபட்டிருந்தாலும் அஹல்யாபாய் பகவானை ஆராதிப் பதிலும் ஜபம் செய்வதிலும் தர்ம காரியங்களைக் கவ னிப்பதிலும் தினந்தோறும் நெடுநேரம் செலவழிப் பாள். இவைகளே இகபர நன்மைகளைத் தரும் என்று அவள் நம்பியிருந்தாள். அவள் சிறந்த ஆஸ்திக சிரோ மணியாகையினால், ஈசுவரன் "நமது ஹிருதயங்களை நிர்ணயிப்பார்" என்று அடிக்கடி கூறுவாள். அன்றி யும் அவள் ஜீவகாருண்யமுடையவ ளாகையினால் எந் தக் குற்றவாளிக்கேனும் மரணதண்டனை விதிக்க நேரி டுங்காலத்தில் "தேகம் அநித்தியம்; ஈசுவரஸ்ருஷ்டியை அழிக்க நாம் வல்லவரல்லர்" என்று கூறுவாள்.

அஹல்யாபாய், தினந்தோறும் சூரியன் உதிப்ப தற்குமுன் துயில் நீங்கி எழுந்து கடவுளைத்தொழுது சிறிது நேரம் சாஸ்திரம் வாசிப்பாள்; பிறகு பிராமண போஜனம் செய்விப்பாள். அவள் மாமிசம் புசிப்ப தில்லை. அவள் சாப்பிடும்போதும் ஏதேனும் மந்திரம் ஜபித்துக் கொண்டிருப்பாள்; போஜனமானபின் ராஜ உடை தரித்துக் கொலுமண்டபம் போய்ச் சிங்காதனத் தமர்ந்து தேச விசாரணை செய்வாள்; இடையில் சிறிது சிற்றுண்டியருந்திப் பின் இரவு ஒன்பது மணிமுதல்

பதிஞேருமணி வரையில் இராஜகாரியங்களைக் கவனிப்பாள்; அதன் பிறகே படுக்கைக்குச் செல்வாள்.

அஹல்யாபாய் இவ்வாறு இராஜரீகஞ்செய்து வந்தபடியால் அவளுடைய ஆளுகையில் சமாதானமே நிலைத்திருந்தது. அவள் 1765-ம் வருஷம் முதல் 1795-ம் வருஷம் வரையில் அரசுபுரிந்து வந்தாள்; முப்பது வருஷகாலம் அரசு செய்திருக்கிறாள். அவள் அடிக்கடி புதிய மந்திரிகளை நியமிப்பதில் சங்கடமுண்டாகுமென்று கருதி, முதலில் நியமித்த மந்திரிகளைக் கொண்டே அதிகாரத்தை நடத்திவந்தாள். அவளுடைய ஆளுகையில், மந்திரியாயிருந்து நல்ல பேர் பெற்றவர்களில் கோவிந்தபந்து என்னும் பிராமணரும் ஒருவர்.

அஹல்யாபாய் ஜனங்களிடத்தில் அபிமானமுடையவளாயிருந்தாள் என்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. அவளுடைய ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தூரில் தனவானுயிருந்த ஒரு வர்த்தகன் இறந்துபோனான். அவனுக்குப் பிள்ளையில்லை. அதனால் அவனுடைய சொத்தை ஹோல்கார் பலாத்காரமாகக் கட்டிக்கொண்டான். அந்த வர்த்தகன் மனைவி அஹல்யாபாயினிடம் போய் முறையிட்டாள். அஹல்யாபாய் உடனே ஹோல்காரை வரவழைத்து அவள்சொத்தை அவளுக்குத் திருப்பிக்கொடுத்து அவளை ஆதரிக்கும்படி கட்டளையிட்டாள்.

அஹல்யை குடிகளுடைய திரவியத்தைக்கொண்டு தன் பொக்கிஷத்தை நிரப்பிக்கொள்ள என்றும் விரும்புவதில்லை. குடிகள் க்ஷேமமாய் விளங்க வேண்டு

மென்பதே அவளுடைய நோக்கம். ஆகையினால் அவள் அந்த நோக்கத்திற்கிணங்க ஆளுகை செய்து வந்து நல்ல பேரெடுத்தாள்.

ஒரு சமயம், ஒரு பெரிய தனவந்தனிறந்து போனான். அவனுக்குப் பிள்ளையில்லை. வரிதண்டு வோன் அவன் மனைவியைப் பயமுறுத்தி அவளிடம் மூன்று லக்ஷம் ரூபா லஞ்சம் கேட்டான்; "கொடுக்கா விட்டால் உன் சொத்தை யெல்லாம் ஸர்க்காருக்குப் பறி முதல்செய்து விடுவேன்" என்றும் கூறினான். இந்தச் சங்கடத்திற்காக அவள் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ள யத்தனம் செய்தாள். வரி தண்டுவோன் அதையும் தடுத்தான்.

இச்செய்தி அஹல்யாபாய்க்குத் தெரிந்தது. அவள் உடனே வரிதண்டுவோனை விசாரணைக்குக் கொண்டு வந்து அவனைத் தண்டித்தாள்; பின் அந்தக் கைம் பெண்ணை வரவழைத்து ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொள்ள அநுமதி தந்து அனுப்பினாள்.

அஹல்யாபாய் சுயநயம் பாராட்டாதவ ளென்ப தற்கு இன்னுமொரு திருஷ்டாந்தமுண்டு.

தனவந்தர்களாகிய இரண்டு சகோதரர்கள் சற் றேறக்குறைய ஏககாலத்தில் இறந்து போனார்கள். அவர்களுடைய சொத்தைப்பற்றி அவர்களுடைய மனைவிமார்கள் அரசி அஹல்யாபாயிடம் தெரிவித்தார் கள். அஹல்யாபாய், அந்தக் கைம்பெண்களைத் தன்முன் அன்பாயழைத்து "நீங்கள் உங்கள்கண வன்மார்களுடைய பேர் நிற்கும்படி அவர்களுடைய சொத்தை ஏதேனும் நல்ல விஷயங்களிலே செலவு செய்

யுங்கள்" என்று புத்திமதிகூறி யனுப்பினாள். பின்பவர்கள் அவ்வாறே அந்தச் சொத்தை நல்ல விஷயங்களிலே செலவிட முற்பட்டு ஒருபெரிய கோவிலும் கட்டிவைத்தார்கள்.

அஹல்யாபாய் தூரதேச அரசர்களோடு பிராமணர்கள் மூலமாய்க் கடிதப்போக்கு வரவு செய்துவந்தாள். அவள் காயகை என்னும் ஒருகோட்டைகட்டி முடித்தாள்; வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரங்கட்டி ஜலவசதிக்காக அங்கே ஒரு கிணறும் வெட்டினாள். அந்தக் கிணறு இன்றைக்கும் ஜனங்களுக்கு உபயோகமாய் வருகிறது. இம்மாதிரி அவள் தன் தேசத்தில் மாத்திரம் செய்யவில்லை. இமயமலை முதல் சேதுவரையிலும் எங்கெங்கே ஹிந்துக்களுக்கு யாத்திரை ஸ்தலமிருக்கிறதோ அங்கெல்லாம் கோவில் கட்டி வைத்தாள். அவள் கட்டிவைத்த கோவில்களுள் மிகச் சிறந்தவைகளில் கயையிலிருக்கும் விஷ்ணுவாலயமும் ஒன்று. இந்தக் கோவில் மிகநேர்த்தியா யிருக்கும்; அழகிய வழவழப்பான கற்களால் அமைக்கப் பெற்றது. கோவிலுக்குள் யாவரும் அதிசயிக்கத்தக்க அலங்காரங்கள் செய்திருக்கும். அஹல்யாபாய் ஸ்ரீராம விக்ரஹமும் ஸீதா விக்ரகமும் செய்துவைத்துப் பூசித்து வந்த கோவிலுமிருக்கிறது.

இந்தக் கோவில்களுக்கெல்லாம் வருஷந்தோறும் செலவுக்காகப் பணம் அனுப்பிவந்தாள்; தென்தேசத்துக் கோவில்களில் சிலவற்றிற்கு அபிஷேகத்துக்காக கங்காஜலம் வரவழைத்துக் கொடுத்துவந்தாள்.

இதுவன்றி, விசேஷ தினங்களில் ஏழைகளுக்கு அன்னமிட்டு வந்தாள்; வழிப்போக்கர்கள் கோடை

காலங்களில் தாகசாந்தி செய்துகொண்டு சிரமம் தீர்த்துக்கொள்வதற்காக, பாதைகளிலெல்லாம் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்துப் பரிபாலித்து வந்தாள்; மழைக் காலங்களில், நோயாளிகளுக்கும் குருடர் தரித்திரர்களுக்கும் அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து ஆதரித்து வந்தாள்; மிருகங்களுக்கும் பறவைகளுக்குங்கூட அவ்வாறே செய்துவந்தாள்; குருவிகள், குடியானவர்களின் பயிர்களை அழிக்காமல் ஒரு பக்கமிருந்து வயிறார மேய்வதன்பொருட்டுச் சில நிலங்களை அவைகளுடைய ஆகாரத்திற்கென்றே பயிரிடும்படி செய்துவந்தாள். குருவிகளெல்லாம் அவைகளில் வயிறார மேய்ந்து களிக்கும்.

அகல்யாபாய் தேசத்துக்கு இத்தகைய நன்மைகள் செய்து வந்தபடியாலும் லௌகிகம் வைதிகம் என்னும் இரண்டு விஷயங்களிலும் சிறந்துவிளங்கியபடியாலும் அவளடைந்த நன்மைகளும் பெருமைகளும் மகிழ்ச்சியும் சௌகரியங்களும் அளவிறந்தனவாகும். குண்டு சிப்பாய் முதலியவைகளைக்கொண்டு பயமுறுத்தி ஜனங்களை ஆள்வதைவிட இவளுடைய ஆளுகை பெருமை தந்தது என்று கூறுகிறார்கள். டிப்பு சுல்தானும் ஏனைய நவாப்புகளும் அஹல்யாபாயிடம் மதிப்பு வைத்திருந்தார்கள். அஹல்யாபாய் இதிகாஸ புராணங்களை அடிக்கடி ஓதி மகிழ்வாள்; ஓதக்கேட்டு இன்புறுவாள்; ஓதியுணர்ந்த கல்விமான்களிடம் அன்பு பாராட்டுவாள்; அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஆதரிப்பாள்; கல்வியிலே பிரியமுடையவர்களுக்குப் பண உதவி செய்து கல்வி கற்பிப்பாள்.

கணவன் இறந்தது முதல் அஹல்யாபாய் வெள்ளை யுடையே உடுத்துவந்தாள்; கழுத்தில் ஒரு தங்கச் சரடே தரித்திருப்பாள். டாம்பீகமான உடை உடுப்பது கிடையாது. தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதை அவள் கேட்க விருப்பங்கொள்ளாள். ஒரு சமயம் ஒரு பிராமணன் அவளைப் புகழ்ந்து ஒரு புஸ்தகம் எழுதிக் கொண்டு வந்து அவள் முன்பு அதை வாசித்தான். அஹல்யாபாய் அதை வெறுத்து அந்தப் புஸ்தகத்தை வாங்கி ஓர் ஆற்றிலெறியச் செய்து பிராமணனுக்குக் கொஞ்சம் சன்மானம் செய்து அனுப்பிவிட்டாள்.

அஹல்யாபாய் 60 வருஷம் ஜீவித்திருந்து 1795 வருஷம் காலஞ்சென்றாள். இவளுக்குப் பொறுக்க முடியாத துக்கங்கள் இரண்டு. ஒன்று, தான் தன் சிறுவயதில் வைதவ்யமடைந்தது; இரண்டாவது தன் மகளும் அவ்வாறே சிறுவயதில் வைதவ்யமடைந்து உடன் கட்டையேற நேரிட்டது.

அஹல்யாபாயின் மகள் முக்தாபாய் என்பவள். அவள் தன் கணவனிறந்ததும் உடன் கட்டையேறி மரிக்கத் தன் தாயாரை அனுமதி கேட்டாள். அஹல்யாபாய் அதற்கு அநுமதிதர இஷ்டப்படவில்லை. அப்பொழுது முக்தாபாய், "அம்மா, பர்த்தா இறந்த பிறகு ஸ்திரீகளுக்கு இந்த உலகத்தில் என்ன சுகமிருக்கிறது? பர்த்தாவின் சுகத்தை இழந்த பின் ஸ்திரீகள் உலகத்தில் வாழவும் வேண்டுமா? இந்தப் பூமியில் எனக்கு நீர் இனியவராயிருப்பினும் உமக்கும் வயதாய்விட்டது. உம்முடைய காலத்திற்குப்பின் நான் இந்தப்பூமியிலிருந்து எப்படிக் காலங்கழிப்பேன்? நான் இறந்துபோவதில் துக்கப்படவில்லை. இனி இறந்துபோவது சுகம். சாஸ்

திரமும் அதற்கு இடந்தருகிறது. ஆதலின் அநுமதி தரவேண்டும்'' என்று நியாயங்கூறி மன்றாடினாள்.

முக்தாபாயின் பிடிவாத குணத்தை மறுக்கமுடியாத அஹல்யாபாய், அவளைக்கண்ணும் கண்ணீருமாகப் பார்த்து, "உன் இஷ்டப்படி நட'' என்றாள்.

பிறகு அஹல்யாபாய் தன் மகளுடன் நர்மதா தீரத்துக்குப் போனாள். அங்கே முக்தாபாய் கணவனையும் தெய்வத்தையும் பிரார்த்தித்த வண்ணம் உடன் கட்டையேறினாள். நெருப்புப்போடப்பட்டதும் அஹல்யாபாய் மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டாள். அப்பால் மூர்ச்சை தெளிந்தெழுந்து அரண்மனை வந்து மூன்றுநாள் அன்னம் தண்ணீரருந்தாமல் பெருந்துயரத்துடன் படுத்திருந்து பின்மனந்தேறினாள்.

இப்படிப்பட்ட மகத்தான துக்கந்தீர அஹல்யாபாய் தன்மகள் பேரால் ஓர் அழகிய கோவில் கட்டிவைத்தாள். அந்தக் கோவிலின் வேலைப்பாடுகளைக் கண்டு இன்றைக்கும் ஜனங்கள் புகழ்ந்து பேசுகிறார்கள்.

அஹல்யாபாயின் தைரியத்தையும் பரோபகார சிந்தையையும் இராஜ நிர்வாகத்திற்கேற்ற புத்தி, யுக்தி, தந்திரங்களையும் நம் தேசத்துப்பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றே இந்தச் சரித்திரம் எழுதலானோம். இது உண்மையான சரித்திரமாகையினால் ஒரு விஷயமும் கதையின் இனிய போக்குக்காக வேண்டி புனைந்துரைத்ததில்லை.

---

மனிதனுடைய மனதில் பல எண்ணங்கள் உதிக்கின்றன. ஆனால் கடவுளுடைய எண்ணமே நிலைக்கின்றது.

# கோழியும் அதன் முட்டையும்.

ஒரு கிராமத்தில் தெய்வபக்தி பூரணமாய் நிறையப்பெற்ற ஒரு நாயகனும் நாயகியும் கிரகாச்சிரம தருமத்தை நடத்திக்கொண்டு வருகையில் அவர்களுடைய தவப்பேருக அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். நாட்டுப்புறத்திலுள்ள சாதாரணப் பள்ளிக்கூடங்களில் அச்சிறுவனைக் கல்விபயிலுவித்தால் அவன் விசேஷமாகச் சாஸ்திரங்களை நன்குணருவதற்கு இடமிராதென்று நினைத்து அப்பெற்றோர் அவனைத் தூரத்திலிருந்த நகரத்துக்கு அனுப்பி அங்குள்ள சர்வகலாசாலையில் கல்வி பயிலச் செய்தார்கள். இளமைப்பருவத்தில் ஈசுவரபக்தியை விளைவிப்பதற்கேற்ற எவ்விதப்பாடத்தையும் அக்கல்விச் சாலையில் உபாத்தியாயர்கள் அவனுக்கு கற்பித்திலர். ஆயினும் லௌகிகத்துக்கு வேண்டிய உலக சம்பந்தமான பல நூல்களையே அவன் அக்கல்விச்சாலையில் சதா கற்றும், ஆன்ம விசாரணை-பரத்துவ நிச்சயமுதலிய விஷயங்களைத் தெரிவிக்கத்தக்க நூல்களைக் கற்காமலும் வந்தான். ஆதலின் அவன் மனம் நாஸ்திகச் சார்பு பெற்றிருந்தது. அக்கல்விச்சாலை விடுமுறை காலத்திலே ஒருநாள் அச்சிறுவன் தன் பெற்ளுரைப் பார்க்கத் தன் தாயகமாகிய கிராமத்துக்குச் சென்ருன். அப்போது அக்கிராமத்தில் அண்டை வீட்டுக்காரனொருவன் இச்சிறுவனுக்கு விருந்தளிக்க நினைத்து அவனைத் தன் வீட்டுக்கு முகமன்கூறி இட்டுக்கொண்டு போனன். அவ்வீட்டுக்காரனுடைய பெண் ஓர் அறையிலிருந்துகொண்டு கடவுள் விஷயமாய்ச் செய்யப்பட்

டுள்ள சில தோத்திரப்பாக்களைப் பக்தியோடு வாசித்துக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் அதைக்கண்டு "பெண்ணே! காலத்திரயத்தும் இல்லாதபொருளாகிய கடவுள் பெயரைப் பலகாலும் நினைத்தும் கூறியும் வீண் காலம் ஏன்போக்குகிறாய்? உபயோக காமான நற்காரியம் எதையேனும் செய்யலாகாதா?" என்று அதி புத்திமான்போல் வினவினான். இதைக்கேட்ட அச்சிறுமி திடுக்கிட்டுப் பிரமித்து, "அப்பா! கடவுளிடத்து உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் யாவற்றையும் படைத்து அளிப்பவர் என்று உனக்குத் தெரியாதா?" என்று கேட்டாள்.

அதற்கு அவன் "நாட்டுப்புறத்துக்கல்விக்கும்பட்டணத்துக் கல்விக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. நாம்சர்வகலாசாலையில் வாசித்தறிந்த பூதபௌதிகசாஸ்திரம்-வானசாஸ்திரம்-கணிதசாஸ்திரம்-மனோதத்துவலட்சணசாஸ்திரம் முதலியவற்றின் உணர்ச்சியினால் யாவும் இயற்கையேயன்றி அவற்றைப் படைக்க ஒருதனிமுதல் வேண்டுவதில்லை யென்று கண்டோம். உலகத்திலுள்ள யாவும் காரணகாரிய ரூபங்களாகவே இருக்கின்றன. அவற்றிற்கு ஓர் முதற்காரணம் உண்டென்றுசொல்வது தர்க்கத்துக்கு நில்லாது என்றும் நன்கு உணர்ந்தோம். இந்நாட்டுப்புறத்துக்கல்வி உனக்கு அவ்வளவு தெளிவை விளைவிக்காது என்று" தன்னைவியந்து உரையாடினான்.

இதைக்கேட்ட அச்சிறுமி "அண்ணா! இதோ இருக்கும் கோழிமுட்டை எங்கே யிருந்துவந்தது? சொல் பார்ப்போம்" என்றாள். அவன் பரிகாசம் செய்து ஸவாஸ்! பேதாய்! இவ்வளவு பெரிய கேள்வியையா நீ என்னைக் கேட்கத் துணிந்தாய்? கோழிமுட்டை

கோழியினிடத்திருந்து வந்தது. இது தெரியாதா?" என்றான். அதற்கு அச்சிறுமி "கோழி எங்கேயிருந்து வந்தது?" என்றாள். அதைக்கேட்ட அவன் "முட்டையிலிருந்து கோழி வந்தது" என்றான். இதைக் கேட்டு நகைத்து அச்சிறுமி "எது முன்னே உண்டாயிற்று? கோழியா? முட்டையா?" என்றாள். அவன் பசபசவென்று விழித்து "அம்மா! கோழிதான் முன்னே உண்டாயிற்று" என்றான். அதற்கு அவள் முட்டையிலிருந்து வெளிப்படாத ஒரு கோழி ஆதியிலிருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா?" என்றாள். அதைக்கேட்டு அச்சிறுவன் "இதென்ன வம்பாயிருக்கிறது" என்று திகைத்துச் சற்றே நிதானித்து "அம்மா! முட்டைதான் முன்னே உண்டாயிற்று" என்றான். இதைக்கேட்ட அச்சிறுமி "பளா! பளா! நன்று! நன்று!" என்று சொல்லிக் கைகொட்டி நகைத்து "அப்பா! கோழியிடாத ஒருமுட்டை ஆதியில் இருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா?" என்றாள். இதைக்கேட்ட சிறுவன் ஒன்றும் பேசவகையறியாது உதட்டைமென்று பல்லைக் கடித்துக்கொண்டு கோபித்து நின்றான். அப்போது அச்சிறுமி அவனைப்பார்த்து அடியில் வருமாறு கூறினாள்.

"சோதரனே! வயதில் என்னினும் நீ மூத்தவன்.
எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

ஒரு விஷயத்தைக் கூறுவாருடைய வயது குணமுதலியவற்றை நோக்காமல் அப்பொருளின் பயனை நோக்கி நலத்தைக் கிரகித்துத் தீயதை விடுவதே உத்தம புருஷனுடைய கடமை யென்று பொருள்பட நாயனார்

கூறிய அமுதத்திருவாக்கை அனுசரித்து என்சொற்களுக்குச் சிறிது செவிசாய்ப்பாயாக. அற்ப வஸ்துக்களாகிய கோழியும் முட்டையும் உண்டான விதத்தைச் சொல்ல வகையறியாத நீ அண்ட சராசரங்கள் யாவும் ஒரு முதற் காரணமின்றி இயற்கையில் தாமே அமைந்தனவென்று சாதிக்கத் துணிந்தது மிகவும் வியப்பாயிருக்கிறது. ஆதியில் உண்டானது கோழியோ? முட்டையோ? எனக்குந் தெரியாது, உலகத்தில் அதனை நிச்சயமாய்க் கூறுவது எத்தகுதிய சாஸ்திரிக்கும் முடியாது. அம்மட்டில் ஆஸ்திகரும் நாஸ்திகரும் சமந்தான்; ஆனால் கோழியையாவது முட்டையையாவது ஆதியில் உண்டாக்கின முதல்வன் ஒருவனிருக்க வேண்டுமென்று அனுமானாதி பிரமாணங்களினால் ஆஸ்திகர் நிச்சயிக்கின்றார்கள். ஆகவே முட்டையிலிருந்து வெளிவராத கோழியாவது கோழியிட்டிராத முட்டையாவது ஆதியில் சர்வ வல்லமையுள்ள கடவுளால் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று மனத்தெளிவு கொண்டிருக்கும் ஆஸ்திகர் இத்தகைய வினாக்களுக்குப் பசபசவென்று விழிக்கவேண்டியதில்லை. அர்த்தசார மற்ற இயற்கை என்னும் பதத்தையே கதியாகக்கொண்டிருக்கும் நாஸ்திகர் இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை பகரமுடியாமல் அல்லற்பட வேண்டிவரும். பரிதாபம்! ஓர் அரசனுடைய அரசாட்சிக்குட்பட்ட இரண்டு குடியானவர்களுக்குள்ளே ஒருவன் தனக்காகவும் ஏனையோர்க்காகவும் அவ்வரசன் செய்துவரும் அளவிறந்த நன்மைகளையும் இராஜாங்க ஏற்பாட்டின் ஒழுங்கையும் சட்டநிரூபண முதலிய விவரங்களையும் நன்குயறிந்தவன்; மற்றவனோ அவைகளில்

எதையும் எவ்வளவும் உணர்ந்திலாக் கயவன்; இவ்விருவருக்குள் இராஜவிசுவாசம் யாரிடத்து அதிகமாயிருக்கும்? முன்னே சொல்லப்பட்டவனிடத்தே தான் இருக்குமென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. அது போல், உலகத்திலுள்ள பூதபௌதிக ஏற்பாடுகளின் விசித்திரங்களையும், சூரியன் சந்திரன் முதலிய அளவிறந்த உடுத்திரள்களின் இயக்கத்தைப்பற்றிய காலக்கிரமத்தையும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த ஜீவராசிகள் அகண்டாகாரவெளியில் எங்கும் நிறைந்திருந்தும் அவற்றிற்கெல்லாம்,

"கருப்பைக்குள்முட்டைக்குங் கல்லினுள்தேரைக்கும்
விருப்புற்றமுதளிக்கு மெய்யன்"

படியளக்கும் விசித்திரத்தையும் பேரருட்டிறத்தையும் சர்வ வல்லமையையும் சாஸ்திரங்களின் மூலமாகப் பூரணமாயுணர்ந்தவன் எவனோ அவனே அங்ஙனம் ஒரு சிறிதும் உணரப் பெறாதவனைவிட எண்ணில் மடங்கு தெய்வநம்பிக்கையும் பக்தியும் பெற்றிருக்க வேண்டியதல்லவா? ஆகையால் என்னிலும் நீ அதிக தெய்வ விசுவாசம் உள்ளவனா யிருத்தல்வேண்டும். இவ்வளவு வரையில் நீ வாசித்தும் அந்த இணையில் ஞான பூரணரை நினைக்கவும் எண்ணம் உதியாதது அம்மம்ம பரிதாபத்துக்கிடம்—" என்றாள்.

அச்சிறுமி இந்தப்படி சொல்லியான பிறகு, "சாப்பிடலாம் வா," என்று அச்சிறுவனை இட்டுக்கொண்டு போனாள். இருவரும் அறுசுவையோடு கூடிய சாப்பாடு உண்டு வீட்டுக்காரன் களிக்க மனமகிழ்ந்தார்கள். அச்சிறுவன் கூடியவரையில் கல்விக்கு அணிகலமாகிய நடுவுநிலைமை யுள்ளவனானபடியால் அச்சிறுமி தனக்

கெடுத்துரைத்த வசனங்களின் உண்மையை அறிந்து அன்றுமுதல் கல்விச்செருக்கை அறவேவிட்டு நாளாவர்த்தியில் ஆன்றோருடைய அனுபவவாக்கியங்களை வாசித்து வெகு சீக்கிரத்தில் தெய்வநம்பிக்கை எய்தப் பெற்றான். ஆகையால் ஒருவன் எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்துப் புத்திவிசாலம் அடையப்பெற்றானை யாயினும் இளமைப்பருவத்திலேயே தெய்வபக்தியை விளைவிப்பதற்கான நூல்களிலும் பயின்று வரவேண்டியது. ஏனெனில்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்." (ஜனவிநோதினி)

---

## TANK UNDER A FIELD

## நிலத்தின் கீழ் குளம்

---

அமிழ்ந்துபோன ஹரிச்சந்திரபுரத்தின் ஆகமனம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தாராசுரம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்திலிருக்கும் ஹரிச்சந்திரபுரம் திடீரென்று பிரதானத்தை அடைந்துவிட்டது. ஒரு திடலின் கீழ் வெகு காலமாக மறைந்திருந்த ஒரு அழகிய குளம் கண்டுபிடிக்கப்பட்டது தான் இதற்குக் காரணம். தாராசுரம் ஸ்டேஷனிலிருந்து ஹரிச்சந்திரபுரத்திற்கு மத்தியில் சில வயல்களே இருக்கின்றன. நாற்புறமும் வயல்களுக்கு மத்தியில் ஓர் உயர்ந்த திடல் இருக்கிறது. கவர்ண்மென்ட் கிஸ்திக் கணக்கில் இதைப் புன்செய் தரிசு நில

மென்று எழுதியிருக்கிறார்கள். இது மற்ற இடங்களை விட 5, 6 அடி உயரமாக இருக்கிறது. இந்த நிலம் கபிஸ்தலம் ஸ்ரீமான் முத்தையா மூப்பனாருக்குச் சொந்தமானது. அவர் இதை நன்செயாக மாற்றிவரு கிறார். சில தினங்களுக்கு முன் சாகுபடிக்காக ஒரு பாகத்தை வெட்டுகையில் 12 அடி வெட்டிய பிறகு மண் வெட்டியில் கடினமான பதார்த்தம் தட்டுப்பட்டது. உடனே அங்கு வேலை செய்தவர்களுக்கு ஏதோ தோன்றி தங்கள் எஜமானருக்குச் சொல்லி யனுப்பி னார்கள். எஜமானர் முன்னிலையில் மறுபடியும் வெட் டியதில் ஒரு குளத்தின் படிகள் தென்பட்டன. அவை குளத்தின் தென் கிழக்கு மூலையாகவும் புதிதாகச் கட் டப்பட்டதாகவும் தோன்றின. சுமார் 15 படிகள் இருக்கின்றன. அவற்றுள் 8 படிகள் நன்றாகத் தெரி கின்றன. படிகளின் நீளம் சுமார் 2 அடி இருக்கிறது; படிக்கட்டின் இரண்டு பக்கங்களிலும் யானைத் தும்பிக் கையைப்போல் கல்லால் செதுக்கப்பட்ட உருவங்கள் அழகாக அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்தக் கல் வேலைகளும் படிக்கட்டுமாகச் சேர்ந்து பார்வைக்கு வெகு ரம்மியமாக இருக்கின்றது. படிக்கட்டிலிருந்து வடக்கு நோக்கி ஒரு மதில் சுவர் போகிறது. சுமார் 20 அடி தூரம் தான் இப்போது வெளியில் தெரிகிறது. இதே மாதிரி சுவர் மேற்கு முகமாகவும் போகிறது. ஜலம் பால்வெண்மை நிறமாக இருக்கிறது. ஆழம் 10 முதல், 15 அடி வரையிலிருக்கும். குளத்தில் இப்போது வெளியான பாகம் சுமார் 20 அடி சதுரமிருக்கலாம். வேலைக்காரர்கள் தண்ணீரை இறைத்து அடியில் என்ன இருக்கிறதென்று பார்த்ததில் சூரிய பகவானின் உரு

வச்சிலே ஒன்று அகப்பட்டது. ருத்திரர் கோவில்களில் இந்த விக்கிரகம் இருப்பது வழக்கம். இதிலிருந்து முழுக் குளத்தையும் வெளிப்படுத்திஞல் இன்னும் விக்கிரகங்கள் கிடைக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. குளத்தின் பக்கத்தில் ஒரு கோவில் இருக்கவேண்டுமென்றும் அதுவும் பூமி மட்டத்தின் கீழ் மூடப்பட்டிருக்க வேண்டுமென்றும் இந்தக் கிராமவாசிகள் கூறுகிருர்கள். இதற்கு ஆதாரமாக அவர்கள் ஸ்தல புராணம், அனுபவம் இரண்டையும் கூறுகிருர்கள். ஸ்தல புராணத்தில் ஹரிச்சந்திரன், தமது சண்டாளத்துவத்திற்குப் பிராயச்சித்தமாக இவ்வூரில் ஒரு கோவிலும் குளமும் கட்டி வைத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் கோவில் ஸ்வாமியின் பெயர் ருத்ரபுரீசுவரராம். இந்தக் குளம் கண்டுபிடிக்கப்படுமுன் இவையெல்லாம் கட்டுக்கதை யெனக் கருதப்பட்டன. ஆஞல் இப்போது குளம் இருப்பது தெரிந்துவிட்டதால், ஜனங்களுடைய மனதில் மத உணர்ச்சி வலுத்துவிட்டது. ஜனங்கள் ஆயிரக்கணக்காக இதைப் பார்க்க வருகிருர்கள். அவர்கள் குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டுத் தேங்காய் உடைத்துத் தீபாராதனை செய்கிருர்கள். பக்கத்திலுள்ள நிலத்தையும் வெட்டிஞல் கோவில் நிச்சயமாக அகப்பட்டு விடுமென்று ஜனங்கள் கருதுகிருர்கள்.

ஸ்தல புராணத்தைத் தவிர, சுற்றிலுமுள்ள நிலத்தைக் கவனித்துப் பார்த்தால் கோவில் இருப்பது நிச்சயமெனத் தெரிகிறது. பொதுவாகத் தஞ்சை ஜில்லா நிலம் களிமண்ணுக இருப்பது எல்லோருக்கும் தெரிந்தது; ஆஞல் இந்தஸ்தலத்திலோ வேறு விதமாயிருக்கிறது. கற்பாறை சமீபமாக இருந்தால் எவ்விதமிருக்

குமோ அப்படி இருக்கிறது. கல்துண்டுகள் எங்கும் சிதறிக்கிடக்கின்றன. மேலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட குளத்தின் அமைப்பிலிருந்தும் அது ஒரு கோவிலைச் சேர்ந்ததாக இருக்கவேண்டுமென்று தெரிகிறது. சாதாரண குளம் இம்மாதிரி இருக்காது. கல்வெட்டு இலாகா இந்தவேலையை மேற்போட்டுக்கொண்டு நடத்தினால் பண்டைக்கால இந்தியாவைப் பற்றிய சின்னங்கள் பல அகப்படுவது நிச்சயம். இந்தக் கிராமத்திலுள்ள மிகுந்த வயதானவர்களுக்கும் குளம் இருந்தது தெரியவில்லை. ஆகையால், சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அது மூடப்பட்டிருக்கவேண்டும். சோழர் காலத்தில் அதற்கு முன்னும் தாராசுரம் பக்கம் விசேஷ உற்சவங்கள் அதிகமாக நடந்த இடம். ஆகையால் கல்வெட்டு இலாகா வேலையைச் செய்வது பல வழிகளிலும் நன்மை பயக்கும்.

கிராம முன்சீப்பு இது சம்பந்தமான விவரங்களைத் தாசில்தாருக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. கவர்ன்மெண்டார் இந்த வேலையை நடத்தாவிட்டால், இந்தப் பாகத்து ஹிந்துக்கள் முக்கிய மிராசுதார்கள் உள்படச் சேர்ந்து ஸ்தலத்தை வெளிக்குக் கொண்டுவரும் செலவை ஏற்றுக்கொண்டு நடத்தத் தயாராயிருக்கிறார்கள். இதற்குள்ளாகவே இந்த ஸ்தலத்திற்கு ஒரு மகத்துவம் ஏற்பட்டுவிட்டது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் போய் வருகிறார்கள்.

23-5-25 (இந்து நேசன்)

# லோரையின் தேயச்சிறுமி

சுமார் சிலவருடங்களுக்குமுன், ஜர்மனியின் ஆட்சிக்கு லோரையின் தேசம் உட்பட்டதாயிருந்தது. அப்பொழுது ஜர்மனிய கலாசாலைகளே அங்கு எங்கும் நிறைந்திருந்தன. ஜர்மன் பாஷையே பள்ளிக்கூடங்களில் ப்ரதானமாக கற்பிக்கப்பட்டிருந்தது. இதனால் லோரையின் தேசம் தற்காலத்து நம் இந்தியாவைப் போல் தன் பாஷையை அசட்டைசெய்து ஜர்மன் பாஷையைப் போற்றிக் கற்று வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தது.

(2) இப்படி இருக்க ஒரு சமயம் ஜர்மனி மகாராணி தேசாடனத்தின் பொருட்டு, லோரையின்தேசம் சென்றார்; அது காலை ஆங்கொரு பெண் பாடசாலைக்கு விஜயம் செய்தார். அங்கே, ராணியார் சில வினாக்களைக் கேட்க, ஒரு சிறுமி திருப்திகரமான விடைகள் அளித்தாள், அதனைக்கேட்டு சந்தோஷித்த சக்ரவர்த்தினியார், அப்பெண்ணை நோக்கி, ''என் அருமைக் குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும் கேள்; கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றார். சிறுமி, பயந்த தன்மையளாய் ராணியாரை வணக்கத்துடன் தொழுது, வாடிய முகத்தினளாய்க் கண்கள் நீர்த்துளிகளைத் துளிக்க, ராணியின் வதனத்தை இரக்கக்குறிப்போடு உற்று நோக்கி, ''அம்மா! நான் கேட்பதை உங்களால் தர இயலாது'' என்று சொன்னாள்.

(3) இதனைக்கேட்ட அப்பெருமாட்டி மிகவும் வியப்படைந்து இக்குழந்தை நம்மால் கொடுக்கக்கூடாத

எதைக் கேட்கக்கூடும்? நம்மால் தரமுடியாததும் ஒன்றுண்டோ?" என்று தம்மனத்துள் எண்ணி, அச்சிறுமியை நோக்கி, "குழந்தாய்! நீ வேண்டுவது தடையின்றி அளிக்கப்படும். அது எதுவேயாயினும் யோசனையின்றிக் கூசாமல் கூறு" என்றார்.

(4) இவ்விதம் மஹாராணியார் சொல்லக்கேட்ட சிறுமி, "சத்தியமாகத் தருவீர்களா?" என்று மறுபடியும் நயந்து வினவினாள். ராணியாரும் அலக்ஷியமாய் "நீ எது கேட்பினும் சத்தியமாய் கொடுக்கிறேன்" என்று உறுதிமொழி கொடுத்தார். உடனே சிறுமி முழந்தாள் படியிட்டு கண்களில் நீர் பெருக விம்மி விம்மி அழுது, "தாயே! உங்கள் பாஷையைப் பயில்வதனால்! எங்கள் தேசத்தில் பாஷாபிமானம் குன்றி, வரவர நாடு கேடடைந்து வருகின்றது. ஆதலின் எங்கள் பாஷையில் நாங்கள் எல்லாக் கல்வியும் பயிலுமாறு உத்தரவளிக்க வேண்டுகிறேன்?" என்று மிகுதியும் கெஞ்சி வணக்கத்துடன் கேட்டுக்கொண்டாள்.

(5) அச்சிறு பெண்மணியின் வேண்டுகோளைக் கேட்டார் இவளுக்குத் தன் தாய்ப்பாஷையினிடத்து எத்துணை ஆர்வம் உள்ளது என்றெண்ணி வியந்தார். ராணி அரசனுணையை மீறித் தான் எப்படி அச்சிறுமியின் வேண்டுகோளை நிறைவேற்றுவது என்று விசனமும் கலக்கமும் அடைந்தார்; அப்பால் ஒருவாறு தேறி, தன்னாலான வரையில் அதன்பொருட்டு மனமாறப் பிரயாசைப்படுவதாகச் சொல்லி அவ்விடம் விட்டு நீங்கிச் சென்றார்.

(6) அச்சிறுமிக்குச் செய்த வாக்குறுதியை அம் மஹாராணி மறக்கவேயில்லை. தம் தேயம் சென்ற தும் தம் வாக்குத்தத்தத்தை எவ்வாறு நிறை வேற்றுவது என்ற கவலையே அவ்வம்மணியை மிக வும் வருத்தத் தொடங்கியது. அவர் சரியான அன்ன பானாதிகளின்றித் துயரத்தோடு இரண்டு மூன்று நாட் கள்வரை யிருந்தார். அரசி வருத்தமுற்றிருப்பதை அறிந்த மஹாராஜா அவ்விடம் வந்து சேர்ந்து தம் இன்னுயிர்க் காதலியை நோக்கி, "உனக்குற்ற குறை என்ன சொல்? நீ என்ன வேண்டினும் இப்போதே தருகிறேன்!" என்றார். அப்பொழுது ராணியார், "எனக்கொரு வரம் அருளல்வேண்டும்; அதை நிச் சயமாகக் கொடுப்பதாகச் சத்தியம் செய்துகொடுத்தால் நான் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்" என்று சொல்ல—அவரும் அவ்வாறே செய்து கொடுத்தார். அப்பொழுது சக்கரவர்த்தினியார், சக்கரவர்த்தியின், திரு முன் அக்குழந்தை செய்ததுபோல் மண்டியிட் டுத் தாழ்ந்து வணக்கத்துடனிருந்து தாம் லோரை யின் தேசம் சென்றதையும், அங்கு சம்பவித்த விஷயங் களையும் எடுத்துக்கூறி "லோரையின் தேசத்தார் தம் தாய்ப்பாஷையின் மூலமாகவே கல்வி கற்க அனுமதி யளித்து ஏழை அச்சிறுமிக்குச் செய்த வாக்குத்தத் தத்தை நிறைவேற்றி யருளவேண்டும்" என்று கண் களில் நீர் பெருக மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

(7) இதனைச் செவியுற்ற அரசர் பெருமான் "இது வரையில் என்னால் செய்யப்பட்ட உத்தரவு எதுவும் மாற்றப்பட்டதேயில்லை. ஆயினும் உனது வேண்டு கோளின்படி இது காலை மாற்ற வேண்டியதாயிருக்கின்

றது" எனக்கூறி அவ்வாறே உத்தரவும் பிறப்பித்துத் தமது தேவியை மகிழ்வித்தார்.

(8) அது முதற் கொண்டு லோரையின் தேசத்தார் தம் பாஷை மூலமாகவே சகல கல்விகளையும் கற்று மிக்க அபிவிருத்தியை அடைந்து சுகமாக வாழ்ந்து கொண்டு வருகின்றனர்கள்.

நந்தேசமும் அந்நிலையை எய்து நாள் எந்நாளோ ?

பண்டித-சே ரா. கணபதி சுப்ரமண்ய அய்யர்,

தமிழ்ப்போதகாசிரியர் - போர்டு ஹைஸ்கூல், கொள்ளே காலம்.

---

ஓர் ஊரில் ஒரு தீக்ஷிதர் இருந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் ஓதி உணர்ந்து நிபுணராக விளங்கினர். அவர் தரும சாஸ்திரங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி அதிற் சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்து விலக்கவேண்டியவைகளை விலக்கி ஒரு கிரந்தம் செய்தார். அந்தக் கிரந்தம் மிகவும் சிரேஷ்டமாயிருந்தபடியால் எல்லோரும் அவரைக் கொண்டாடினார்கள். அந்தக் கிரந்தமும் ஏராளமாக விலையாயிற்று.

இப்படியிருக்கையில் தீக்ஷிதருடைய கிரந்தத்தைப் படித்துப் பார்த்த ஒரு வேதியர், தீக்ஷிதரை நேரில் பார்த்து அவரை வணங்கி ஆசீர்வாதமடைய விரும்பி அவருடைய ஊருக்குப்போய் அவரிருந்து வரும் வீட்டை அடைந்தார். அவர் அங்கே போனபோது பொழுது விடிந்து பதினொரு நாழிகை யிருக்கும். அவ்வூரில் சிலரைத்தவிர ஏனையரெல்லோரும் காலையில் தாங்கள் செய்யவேண்டிய கடன்களையெல்லாம் செய்து முடித்துத் தம் தம் தொழிலைநாடி நின்றனர்.

இச்சமயம் தீக்ஷிதர் வீட்டுத்திண்ணையில் ஒருவர் உட்கார்ந்து பல் விலக்கிக்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும், தீக்ஷிதர் தரிசனத்துக்கு வந்த வேதியர், "என்ன அநியாயமிது! இந்நேரத்திற்குப் பல் விளக்குகிறான் இந்த மூடன்!" என்றெண்ணி வியந்து பின் அவரைப்பார்த்து, "ஐயா, தீக்ஷிதர் கிரகம் இதுதானோ? தீக்ஷிதர் இருக்கின்றாரா?" என்று கேட்டார்.

அவர், "இதுதான் தீக்ஷிதர் கிரகம்! அவர் இருக்கிறார்! என்ன வேண்டும்?" என்று கேட்டார். வேதியர், "நான் அவரைப் பார்க்கவேண்டும்" என்றார்.

இப்படிச் சொல்லவே, பல் விளக்கிக்கொண்டிருந்த அவர் சடக்கென்று எழுந்து "நான்தான் தீக்ஷிதர்! தருமசாஸ்திர கிரந்தம் வேண்டுமோ?" என்று கேட்டார்.

வேதியர்—"தருமசாஸ்திரம் எழுதிய தீக்ஷிதரா தாங்கள்? அவர்தானோ?" என்று வியப்புடன் கேட்டார்.

தீக்ஷிதர்—"நான்தான்! ஏன் சந்தேகம்?" என்றார்.

வேதியர்—"தருமசாஸ்திரம் விளக்கிய பண்டிதராகிய தாம் இந்நேரத்தில் பல் விளக்கியபடியால் சந்தேகங்கொண்டேன். இந்நேரத்தில் பல் விளக்குவது தகுமா? பொழுதெழு முன்பல்லவா பல் விளக்கவேண்டும்? நீர் இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்.

தீக்ஷிதர்—"நீர் நான் இயற்றிய தருமசாஸ்திரத்தைச் சரியாய்ப் படிக்கவில்லையென்று நினைக்கிறேன்"—என்றார்.

வேதியர்—படித்திருக்கிறேன்! அதில் இப்படி பல் விளக்குவதை விலக்கியிருக்கிறது" என்றார்.

தீக்ஷிதர்—அதில் நான் "பொழுது விடியுமுன் பல் விளக்குகிறேன்" என்று எங்கும் எழுதவில்லையே! "பொழுது விடியு முன் பல் விளக்கவேண்டும்" என்றே எழுதியுள்ளேன். ஆதலால் என்னிடம் நீரேன் குற்றம் சொல்கிறீர்?" என்று கேட்டார்.

கேட்டவளவில் வேதியர் வேறு பேசாமல், "சொல்வது எளிது. படிப்பது எளிது. சொல்லிய வழியிலும் படித்த வழியிலும் நிற்பது அரிது" என்று சொல்லிக்கொண்டே திரும்பிவிட்டார்.

---

## ஹாஸ்யம்

(1) ஒருவன் தன் தலையின்மேல் பெரிய கொள்ளு மூட்டையை வைத்துக்கொண்டு ஒரு குதிரையின்மேல் சவாரி செய்துகொண்டு போனான். அவனைக்கண்ட வழிப்போக்கர்கள், நகைத்து "என்ன ஐயா குதிரை சூலாகயிருக்கிறதே உன்னையும் உன் தலைமேலிருக்கும் மூட்டையையும் எப்படிச் சுமந்து நடந்து செல்லும்?" என்று கேட்டார்கள். குதிரைக்காரன் "அதனால்தான் மூட்டையைக் குதிரைமீது வைக்காமல் நான் என் தலையின்மீது வைத்துச் செல்லுகின்றேன்" என்றான்.

* * *

. ரெட்டியாரொருவர் தட்டானைப் பார்த்து இகழ்ச்சியாக "ஐயா மேலே பறக்கிற தட்டாரப்பூச்சியைப் பாருங்கள்! எவ்வளவு உயரத்தில் பறக்கிறது?" என்றார். உடனே தட்டான் "இப்போது பறக்கிறதைவிட இன்னும் ஒட்டிக்கிரட்டியாகப் பறக்கும்" என்றான்.

# திருக்குறள்.

## நடுவு நிலைமை

### (12-ம் அதிகாரம்.)

*நடுநிலைமையாவது, பகைவர், அயலார், நட்பினர் என்னும் மூவகை யாரிடத்தும் ஒருபடித்தாயிருக்கும் நிலைமையாம்.*

(1) தகுதியெ னவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்

*பகைவர், அயலார், நட்பினர் என்னும் மூன்று பிரிவினரிடத்தும் முறைமையை விடாமல் நடந்துவருவதாகிய இந்த நடுநிலைமையே நல்ல அறமாகும்.*

(2) செப்பமுடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து

*நடுவுநிலைமையை உடையவனுடைய செல்வமானது, அழியாமல் அவனுடைய சந்ததியார்க்கு உறுதியாய் உதவும்.*

(3) நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே ஒழிய விடல்

*நடுவுநிலைமை இல்லாத வழியில் வரும் செல்வமானது நன்மையைக் கொடுப்பதா யிருந்தாலும் அப்பொழுதே அதனைக் கைவிடவேண்டும்.*

(4) தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்

*இவர் நடுவு நிலைமையுடையவர் இவர் நடுவு நிலைமை இல்லாதவர் என்பதை அவரவர்களுடைய பிள்ளைகளின் குணங்களால் காணலாம்.*

(5) கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

*தீவினையினால் கேடும் நல்வினையினால் வாழ்வும் யாவர்க்குமுண்டு. ஆதலின் அவை காரணமாக மனம் வேறுபாடடையாதிருத்தலே அறிவுடையவர்க்குஅழகு.*

(6) கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவோரீ இயல்ல செயின்

*நடுவு நிலைமையிலிருந்து ஒருவன் நீங்க நினைப்பானானால் அது அவன் நான் கெடக்கடவன் என்று உணர்வதற்கு ஓர் அறிகுறியாகும்.*

(7) கேடோக வையாதுலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு

*நடுநிலைமை தவறாமல் தருமமார்க்கத்தில் செல்லும் ஒருவன் வறுமையடைந்தாலும் அந்த வறுமையைப் பெரியோர் தாழ்மையாக எண்ணார்.*

(8) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்
கோடாமை சான்றோர்க் கணி [தொருபாற்

*நடுவுநிலைமையை விட்டு ஒருவரிடமும் சாராமையே பெரியோர் என்பவர்க்கு அழகாம்.*

(9) சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்

*சொல்லும் சொல்லில் கோணுதலில்லாமையே நடுவு நிலைமையாகும்.*

(10) வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்

*பிறருடைய பொருளையும் தன்னுடைய சொந்தப் பொருளைப்போல் பாதுகாத்து வியாபாரம் செய்வதே நல்ல வியாபாரமாம்.*

முருகன் பேரில் ஓர் இங்கிலீஷ் நோட்டு

Oh Muruga come on the Pea-cock
Why do you hide on the high hilly rock

Am I not your honour
humble poor servant

I represent my requirement

(Oh Muruga come)

Is there any one to help me in this world
Is it not your bounden duty to show guide
Yes yes I know that you are lad but child
Kiss and embrace me without being failed

This is an application of Pakkiridasan

Your own son Cover grand sin

(Oh Muruga come)

E. S. SUBRAHMANYA IYER.

---

*Address:—*

**E. S. Subrahmanya Iyer,**

**Songster. Veerappanchattram,**

Periya Agraharam Post, (Near Erode.)

COIMBATORE DISTRICT.